AgEcon SEARCH
RESEARCH IN AGRICULTURAL & APPLIED ECONOMICS

*The World's Largest Open Access Agricultural & Applied Economics Digital Library*

**This document is discoverable and free to researchers across the globe due to the work of AgEcon Search.**

**Help ensure our sustainability.**

Give to AgEcon Search

AgEcon Search
http://ageconsearch.umn.edu
aesearch@umn.edu

*Papers downloaded from **AgEcon Search** may be used for non-commercial purposes and personal study only. No other use, including posting to another Internet site, is permitted without permission from the copyright owner (not AgEcon Search), or as allowed under the provisions of Fair Use, U.S. Copyright Act, Title 17 U.S.C.*

பாசன மேலாண்மை மாற்றம் நிலையம் - இந்தியா

The International Irrigation Management Institute - LIBRARY
29 NOV 1996
IIMI

# பாசனம் பயன்படுத்துவோர் சங்கம் வாகைகுளம் ஏரி வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் தாமிரவருணி : விவசாயிகளின் அனுபவம்

வி. செல்வம்

IIM AHMEDABAD

இந்திய மேலாண்மை நிறுவனம், அகமதாபாத்

IIMI
IIMI, 1995

பன்னாட்டுப் பாசன மேலாண்மை நிறுவனம், கொழும்பு

டிசம்பர் 1995

H 19454 C1

© இந்திய மேலாண்மை நிறுவனம், அகமதாபாத் 1995 (IIMA)
பன்னாட்டு பாசன மேலாண்மை நிறுவனம், கொழும்பு 1995 (IIMI)

பதிப்புரிமை பெற்றது

தகவலுக்கும், விமர்சனத்திற்கும் தயவு செய்து அணுகவும் :

செய்தி தொடர்பகம்
பன்னாட்டு மேலாண்மை நிறுவனம்
த.பெ.எண் 2075
கொழும்பு
இலங்கை

# முன்னுரை

இக்கையேடு பாசனம் பயன்படுத்துவோர் சங்கம் அமைக்கவும் அதன் மேலாண்மைக்கும் உழவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளைச் சுருக்கமாக விளக்கும் தொடரில் ஒன்றாகும். இவ்வுழவர்களின் முயற்சிகளைப் பற்றிய சுருக்கமான, எளிமையான, சுவையான செய்திகள் மாநிலத்தின் பிற பகுதிகளிலுள்ள விவசாயிகள் பாசன சேவைகளைப் பெறுவதற்கு வழிகாட்டும் என்பதே இத்தொடரின் நோக்கம். இந்த ஆராய்ச்சி ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் வெளியிடப்பட்டுள்ளது. இத்தொடரின் பிற நிகழ்வுப் படைப்புகள் பின் அட்டையில் தரப்பட்டுள்ளன.

இந்த அனுபவத்தை IIMA, IIMI குழு உறுப்பினர்களின் வழிகாட்டலுடன் **வி. செல்வம்** எழுதினார். அவர் இதில் குறிப்பிடப்பட்டுள்ள உழவர்களோடு அக்டோபர் 1994 முதல் ஏப்ரல் 1995 வரை உடனிருந்தார். அங்கிருந்தபோது அவர் உழவர்களைக் கேட்டறிந்தும் நிகழ்வுகளைக் கண்ணுற்றும் இப்பகுதியில் பாசன சங்கம் அமைத்த விதம், அதன் பாசன மேலாண்மைச் செயற்பாட்டில் மாற்றம் ஆகியவற்றைப் பதிவுசெய்தார். இங்கு கொடுக்கப்பட்டுள்ள செய்திகள் உழவர்களின் எண்ணங்களையும், ஆலோசனைகளையும் எடுத்துக்காட்டுபவையாகும்.

**செல்வத்தின்** இந்த முயற்சி 1993 முதல் 1995 வரை **இந்திய மேலாண்மை நிறுவனம் அகமதாபாத்தும் (IIMA)**, **பன்னாட்டுப் பாசன மேலாண்மை நிறுவனம் (IIMI ) கொழும்பும்**, **இணைந்து ஃபோர்ட் குழும நிதிஉதவியோடு** மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் ஒரு பகுதியாகும். இந்த ஆராய்ச்சி அரசு மற்றும் அரசு அல்லா நிறுவனங்களும், அரசிடமிருந்து உழவர்களுக்குப் பாசன மேலாண்மை மாற்றம் ஏற்படுத்தும் வகையில் மேற்கொண்ட கொள்கைகளையும் செயற்பாடுகளையும் ஆய்வு செய்து பதிவு செய்யப்பட்டவையாகும். இதன் முழு நோக்கம் இந்தியாவின்

பாசன மேலாண்மை மாற்றத்திற்குத் தேவையான சீரிய கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்க வழிகோலுவதாகும். இவ்வாராய்ச்சிக் குறிப்புகள் இந்த சிறு நிகழ்வுத் தொடர்களோடு கூட ஆராய்ச்சிக் கட்டுரைகளாகவும் பிற வடிவங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் முதன்மை ஆராய்ச்சியாளர்கள் IIMA வைச் சேர்ந்த **சசிகோலவல்லி, அமர்லால் கால்ரோ, கோபால் நாய்க், S, ராம்நாராயன்** மற்றும் IIMI ச் சேர்ந்த **ஜெப்ரி டிபுருவர், R. சக்திவடிவேல், K.V. இராஜு** ஆகியோராவர். சாமி **சுப்பிரமணியன்** இந்நூலின் தொகுப்பாசிரியர். அவரால் தமிழில் உருவாக்கப்பட்ட நூல்வடிவம் அவராலேயே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு ஆராய்ச்சிக்குழுவால் குறிப்பாக, **ஆர். சக்திவடிவேல், ஜெப்ரி டி. புருவர்** ஆகியோரால் பரிசீலிக்கப்பட்டது.

**செல்வத்துடன்** சேர்ந்த இந்த ஆராய்ச்சிக்குழு, எந்த பலனும் எதிர்பார்க்காது நல்கிய உபசரிப்புகளுக்கும் தங்களை அணுகிய நேரங்களில் நினைப்பையும் நேரத்தையும் செலவிட்டதற்கும், சலிப்பேரி கிராம மக்களுக்கும், அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. அவர்களின் அனுபவம் மற்றையோருக்கு பலனளிக்கும் என நம்புகிறோம்.

**ஜெப்ரி டி. புருவர்**
IIMI

**கோபால் நாய்க்**
IIMA

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | **அணிந்துரை**<br>முன்னுரை | |
| 2 | **தாமிரவருணி திட்டம்**<br>கோடை மேலழகியான் கால்வாய் வாகைகுளம் | 2 |
| 3. | **இடையூறுகள்**<br>பருவநிலை, மண், கிராமசமூகம்,<br>குத்தகை, ஆராய்ச்சி நிலையம்,<br>பயிர்த்திட்டம். | 4 |
| 4. | **செயல் மாற்றம்** | 9 |
| 5. | **தற்போதைய நிலைமை**<br>சங்க நோக்கங்கள்-பொறுப்புகள்<br>திட்ட நிர்வாகம் | 11 |
| 6. | **சங்கப் பணிகள்**<br>தண்ணீர் கொண்டுவரல்,<br>தண்ணீர் பங்கீடு, சீரமைப்பு,<br>நிதி ஆதாரம், பிணக்குகள் | 15 |
| 7. | சங்க கூட்டமைப்பு | 23 |
| 8. | விளைவும் பயனும் | 23 |
| | இணைப்பு | |

# பாசன மேலாண்மையில் பயன்படுத்துவோர் பங்கு வாகை குளம் - ஒரு கண்ணோட்டம்

தமிழகத்தில் பாசனம் தொன்மையானது. குளங்கள் அமைத்தும், சிறுசிறு தேக்கங்கள் ஏற்படுத்தியும் வாய்க்கால் ஆறுகளில் ஓடும் நீரை நம் முன்னோர் பாசனத்திற்கு உபயோகித்து வந்துள்ளனர். தமிழகத்தில் பாசனம் சிறப்பாக அமைந்ததற்குப் பயன்படுத்துவோரின் ஈடுபாடு முக்கியமாகும் என்றாலும் பெரும் பெரும் அணைக்கட்டுகளும், நீர்த்தேக்கங்களும் உருவாக்கப் பொதுப்பணித்துறை அமைக்கப்பட்டு அதுவே நீர் மேலாண்மையை மேற்கொள்ளத் துவங்கியபின் பயன்படுத்துவோர் ஈடுபாடு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்துள்ளது. நாடு சுதந்திரம் பெற்றபின் சிறிது சிறிதாக ஊர் அமைப்புகள் சிதையத் தொடங்கி மக்கள் ஈடுபாடு மறைந்து வருகிறது. எல்லாவற்றிற்கும் அரசை எதிர் நோக்கும் நிலைமை உருவாகிவிட்டது. இதனால் பாசன மேலாண்மையிலும் பயன்படுத்துவோர் ஈடுபாடு குறைந்து, கிடைக்கும் நீரைப் பயன்படுத்தும் திறன் குறைந்து விட்டது.

தமிழகத்தின் நீர்வளம் 120 ஆயிரம் கோடி கன அடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆண்டொன்றில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடிய அளவு 20,000 கன அடி மட்டுமே. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஒருவருக்குக் கிடைக்க வாய்ப்புள்ள நீரை நிறுத்தினால் ஆறு அங்குல ஆழம் மட்டுமே இருக்கும். அகில இந்திய அளவில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கக் கூடிய (1,40,000 கன அடி) அளவோடு ஒப்பிடும்போது தமிழகத்தில் கிடைப்பது ஏழில் ஒரு பங்கு மட்டுமே. பாசனத்திற்கு மேலும் அதிக நீர் கிடைக்க வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் கிடைக்கக்கூடிய நீரைச் சிறந்த முறையில் உபயோகிப்பதன் மூலமே உற்பத்தியைப் பெருக்க முடியும். நமது முன்அனுபவமும், வெளிநாடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைப் பார்க்கும்பொழுதும் பயன்படுத்துவோர் பாசனநீர் மேலாண்மையில் பொறுப்பேற்பது மட்டுமே சிறந்த வழி என்ற சூழ்நிலை உருவாகி வருகிறது.

## தாமிரவருணி திட்டம்

தமிழகத்தின் தென்பகுதி பாசனத்தில் மிக முக்கியமானதும், தொன்மையானதும் தாமிரவருணி ஆற்றுப்பாசனத் திட்டமாகும். தமிழகத்தின் எல்லையிலேயே தொடங்கி முடியும் ஒரே நதி தாமிரவருணி, மற்ற ஆறுகள் கேரளம், கர்நாடக மாநிலங்களில் தொடங்கி தமிழகத்தில் தவழ்கின்றன. தென்மேற்கு மலைத்தொடரில் 2,000 மீட்டர் உயரத்தில் குறிஞ்சி நிலப்பகுதியில் தொடங்கி, முல்லை நிலத்தில் ஓடி, மருத நிலத்தில் தவழ்ந்து, நெய்தலில் பரவி, மன்னார் வளைகுடாவில் கலக்கும் தாமிரவருணி சிறப்பு பெற்ற நதியாகும். ஆற்றின் நீளம் 250 கி.மீ.

பொதிகை மலைப்பகுதியில் பொழியும் மழை நீர் தாமிரவருணியில் கலக்கிறது. அகத்திய மாமுனிவர் கயிலை மலையில் நிகழ்வுற்ற சிவன் சக்தி திருமணத்தைப் பொதிகை மலையிலிருந்து கண்டுகளித்ததாகவும் பின்னர் பொதிகையில் தவமிருந்து முக்தி அடைந்ததாகவும் நம்பப்படுகிறது.

சேர்வலாறு, மணிமுத்தாறு, கோரையாறு, கடனா, பச்சையாறு, சிற்றாறு ஆகியவை தாமிரவருணியில் கலக்கும் உபநதிகளாகும்.

ஆற்றின் 16வது கி.மீட்டரில் பாபநாசம் நீர்த்தேக்கம் உள்ளது. நீர்மின்சாரத்திற்காகக் கட்டப்பட்ட இந்தத் திட்டம் 1944ஆம் ஆண்டில் நிறைவு பெற்றது. இதன் கொள்ளளவு 156 மி.கன மீட்டர். நீர்பிடிப்பகுதி 150 சதுர கி.மீ.

சேர்வலாறு தாமிரவருணியில் சேரும் மலைப்பகுதியில் (22 கி.மீ) ஒரு பிரிவு அணை கட்டப்பட்டுத் தண்ணீரைக் குழாய் மூலம் கீழே இறக்கி 28 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது (தேக்கக் கொள்ளளவு 105 மி.க.அடி).

தாமிரவருணி ஆற்றின் குறுக்கே எட்டு அணைக்கட்டுகள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றில் திருவைகுண்டம் அணைக்கட்டு தவிர மற்ற ஏழும் ஆங்கிலேயரின் இந்திய வருகைக்கு முன்பே கட்டப்பட்டவையாகும். இந்த எட்டு அணைக்கட்டுகளிலிருந்து 11 கால்வாய்கள் பிரிகின்றன.

இக்கால்வாய்கள் நேரடியாகவும் குளங்கள் மூலமும் 63,000 எக்டேர் சாகுபடி நிலம் பாசனம் பெற வகை செய்கின்றன.

தமிழகத்தின் பாசனச் சிறப்பு ஏரிகள் 39,000த்திற்கு அதிகமான ஏரிகள் 10 லட்சம் எக்டேர் நிலத்திற்கு பாசனமளிக்கின்றன. ஆறுகளில் பாசன மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது ஆற்றுப்பாசனப் பகுதியில் அமையும் ஏரிகளின் நீர் நிலையை நிலைப்படுத்துவது முக்கிய குறிக்கோளாகும். ஆற்றிலிருந்து பிரியும் கால்வாய்கள் நேரடியாக நீர்ப்பாசனமளிப்பதோடு குளங்கள் மூலமாகவும் பாசனத்திற்கு வழிவகுக்கின்றன. நீர்பிடிப் பகுதியிலிருந்து நீர் பெறுவதோடு கால்வாய்கள் மூலமும் நீர் பெறும் குளங்களை 'சிஸ்டம்குளங்கள்' என அழைக்கிறோம்.

**கோடை மேலழகியான் கால்வாய்** வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் இதுபோன்று 18 குளங்களுக்குப் பாசன வசதி அளிக்கின்றது. கல் அணை கட்டப்படுவதற்கு முன்பு பனை மரங்கள் ஆற்று நீரைத்தேக்கி வடக்கு கோடை மேலழகியான் கால்வாய்க்கு நீர் திருப்பி விடப்பட்டதாகத் தெரிகிறது. **கோடை மேல்விளையும் கால்வாய்** (கோடையிலும் விளையும்) திரிந்து கோடை மேலழகியான் கால்வாய் எனப் பெயர் வந்ததாகச் சிலர் தெரிவிக்கின்றனர்.

கோடை மேலழகியான் அணையிலிருந்து வடக்கே பிரியும் கால்வாய் பாபநாசம் மலையடியில் சமஉயரக் கால்வாயாக 5 கி.மீ பாம்புபோல் வளைந்து நகர்ந்து செல்கிறது. மழைக்காலத்தில் மலைப்பகுதியிலிருந்து செங்குருதியாக வண்டலுடன் கலந்துவரும் மழைநீர் கால்வாயில் கலக்கிறது.

தாமிரவருணியில் பாசன மேலாண்மை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆற்றின் குறுக்கே அணைகள் எழுப்பிக் கால்வாய்கள் வெட்டி நேரடிப் பாசனத்திற்கும், குளங்களுக்கு நீரளிப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

தாமிரவருணி ஆற்றின் முதல் கால்வாயான வடக்கு கோடைமேலழகியான் கால்வாய், பாபநாசம் மலைச்சரிவின் அடியில் மேற்கு

நோக்கிச் செல்லும் 18 கி.மீ. நீளக் கால்வாயில் 63 மடைகள் உள்ளன. நேரடியாகவும், 18 குளங்கள் மூலமாகவும் 913 எக்டேருக்குப் பாசனமளிக்கிறது.

**வாகை குளம்** கால்வாயின் கடைமடைப்பகுயில் (54-வது மடை) அமைந்துள்ள பெரிய ஏரி வாகைகுளம். இதன் மூலம் 88 எக்டேர் பாசனம் பெறுகிறது.

வாகைகுளத்தில் பாசன மேலாண்மைக்காக 1959ஆம் ஆண்டு ஒரு சங்கம் அமைக்கப்பட்டு 1960ஆம் ஆண்டு வடக்கு கோடைமேலழகியான் நில உடைமையாளர் சங்கம் எனப் பதிவு செய்யப்பட்டுச் சிறந்த முறையில் செயற்பட்டு வருகிறது.

பன்னாட்டுப் பாசன மேலாண்மை நிறுவனமும் (கொழும்பு) அகமதாபாத், இந்திய மேலாண்மை நிறுவனமும் இணைந்து பயன்படுத்துவோருக்குப் பாசன மேலாண்மை மாற்றம் என்ற ஆராய்ச்சியை மேற்கொண்டனர். இவ்வாராய்ச்சியின் ஒரு அங்கமாக ஒரு ஆராய்ச்சியாளர் மூலம் வாகைகுள சங்க செயற்பாட்டினைக் கண்டறிந்தோம்.

## இடையூறுகள்

தாமிரவருணி ஆற்றில் ஆண்டுக்குப் பத்துமாதம் நீர் பாய்கிறது (சூன் முதல் மார்ச் வரை). வடக்கு கோடைமேலழகியான் தாமிரவருணியிலிருந்து பிரியும் 12 கால்வாய்களில் முதல் கால்வாய் என்றாலும் வாகைகுளத்திற்கு நீர்வருவதில் பல இடையூறுகள் உள்ளன. கால்வாய்க்குக் கிழ்ப்பகுதியில் ஆறு ஓடுகிறது. பாசன வாய்க்காலில் போதுமான நீர் கிடைக்கக் கால்வாயில் தலைமடைப்பகுதியில் தூர் எடுக்க வாகைகுளம் பாசனச் சங்கம் பெருந்தொகை செலவிட வேண்டியுள்ளது.

அ. வடக்கு கோடைமேலழகியான் கால்வாயில் போதுமான நீர் திறந்துவிடப்பட்டாலும் முதலில் உள்ள 32 மதகுகளில் கணிசமான அளவு நீர்க்கசிவு ஏற்படுகிறது. இக்கசிவு நீர் வாய்க்கால் மூலம் கீழ்ப்பகுதியில் ஓடும் ஆற்று நீருடன் கலந்து விடுவதால்

பொதுப்பணித்துறை கசிவுகளைக் கட்டுப்படுத்தவோ அதிக நீர் அளிக்கவோ கவனம் செலுத்துவதில்லை. இம்மதகுகள் தேவைக்கு அதிகமாகப் பெரிதாக உள்ளன. மதகுகளில் தடுப்புப் பலகைகளும் கிடையாது. மதகுகளை அடைக்கப் பாசனதாரர் மணல்மூட்டை, குப்பைகூளங்களை உபயோகிக்கின்றனர். பாசனப்பகுதிக்கு நீர் வரும் வாய்க்கால் செங்குத்தாகத் தாழ்வான பகுதியில் இருப்பதால் மடை திறந்தவுடன் தண்ணீர் தடையின்றி பெருக்கெடுத்தோடுகிறது.

ஆ. மலையடிவாரத்தில் சம அளவு உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கால்வாயில் மலைச்சரிவிலிருந்து வரும் சிற்றோடைகளும், மண் அரிப்புடன் கலந்துவரும் வண்டலும் கலக்கின்றன.

இ. கால்வாயின் வலப்புறம் கலிங்குகள் உள்ளன. போதுமான நீர் செல்லப் பாசனதாரர்களால் பல தற்காலிகத் தடுப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

ஈ. கால்வாயின் தண்ணீர், மடை வாய்க்கால் மூலம் ஓடி ஆற்றில் சேருமிடத்தில், நீரின் வேகத்தை எதிர்த்து மேல்நோக்கி நீந்தும் மீன்களை எளிதாகப் பிடிக்கக் கால்வாயின் மடை திறந்துவிடப்படுகிறது. நாங்கள் கால்வாயினைப் பார்வையிட்டபோது இதைக் காண முடிந்தது. இதனால் கால்வாயின் கடைப்பகுதிக்குச் செல்லும் நீரின் அளவு குறைகிறது.

உ. கால்வாயின் இடப்பக்கமாக உள்ள நிலத்திற்கு அனுமதி பெறாமல் கால்வாயிலிருந்து நீர் இறைத்துச் சாகுபடிசெய்யப்படுகிறது. இவ்வாறு அனுமதியில்லாமல் சாகுபடியாகும் நிலம் மொத்த பாசனப்பரப்பில் 20 சதம் இருக்கும் எனத் தெரிய வருகிறது. கால்வாயின் ஓரமாக உள்ள சில பகுதிகளுக்கு நீர் நேரடியாகவும் பாய்கிறது. பயிர் முதிர்ச்சிப் பருவத்தில் தாழ்வான பகுதியின் வயல் நீர் எளிதாக வடிவதற்காகக் கீழ்ப்பகுதி மதகுகள் திறந்துவிடப்படுகின்றன. இதனாலும் கால்வாயின் கடைமடைப் பகுதிக்கு நீர் செல்வது பாதிக்கப்படுகிறது.

ஊ. மலைப்பகுதியிலிருந்து வரும் சிற்றோடைகள் கால்வாயில் சேரும்போது பெரும் அளவில் வண்டல் கால்வாயில் படிகிறது. இவ்வாறு படிந்த வண்டல் எடுக்கப்பட்டுத் தென்புறக் கரையில் மலைபோல் குமிக்கப்படுகிறது. மழை பெய்யும்போது இவ்வண்டல் மீண்டும் கால்வாயில் படிகிறது. வண்டல் எடுக்கப்படாத பகுதியில் கால்வாய் மேடாக உள்ளது. இதனால் கால்வாயில் செல்லும் நீரின் வேகம் தடைபடுகிறது. இதுவும் கால்வாயின் மேல்பகுதியில் நீர் தேங்கி நிற்பதற்கு முக்கிய காரணம்.

எ. மதகு எண் 32க்குக் கீழ் கால்வாய்ப் பகுதி பாறையாக உள்ளது. பாறை போதுமான அளவு தாழ்த்தப்படவில்லை. இதனால் கால்வாய் நீரோட்டம் தடைபடுகிறது.

ஏ. கால்வாயின் ஓட்டத்தில் இரண்டு **குளமேல் கால்வாய்** உள்ளன. சூன் மாதம் பாசனத்திற்காக நீர் திறந்துவிடும்போது இந்தக் குளங்கள் நிரம்பிதான் கீழ்ப்பகுதிக்கு நீர் செல்ல வேண்டும். இதனால் கீழ்ப்பகுதிக்கு நீர் வந்து சேர நாட்கள் அதிகமாகின்றன.

ஐ. வாய்க்காலின் இடப்பகுதியில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்பு கால்வாயின் அகலத்தைக் குறைத்துவிடுகிறது. அப்பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் நட்டுள்ள ஐபோமியா எனப்படும் நெய்வேலிக் காட்டாமணக்கு கரையில் ஆழமாக வேரோடிக் கால்வாயின் பெரும் பகுதியில் படர்ந்து கிடப்பதால் நீரின் கொள்ளளவு பாதிக்கப்படுகிறது.

பல்வேறு வகையில் மலைச்சரிவிலிருந்து கால்வாயில் படியும் வண்டல், வளர்ந்துவரும் ஐபோமியா, ஆக்கிரமிப்பு, அனைத்தும் கால்வாய் மூலம் வாகைக்குளத்திற்குச் செல்லும் நீரின் அளவைப் பெரிதும் பாதிக்கின்றன.

வடக்கு கோடை மேலழகியான் கால்வாயில் 54 நீங்கலாக 48 முதல் 60வது மதகுகள் மூலம் வாகைகுளம் கிராமம் சுமார் 129 எக்டேர் பாசனம் பெறுகிறது. 54வது மதகு மூலம் வாகைகுளத்திற்குத் தண்ணீர்

பாய்கிறது, குளத்தின் நீர்ப்பரப்பு 16 எக்டேர். இதன் கொள்ளளவு 79 லட்சம் கன அடி. வாகைகுளம் 89 எக்டேர் நிலப்பரப்பிற்கு பாசனமளிக்கிறது.

**பருவநிலை** தாமிரவருணி பாசனப்பகுதியான ஆற்றின் முற்பகுதியில் மழை அதிகம். அம்பாசமுத்திரத்தில் 924 மி.மீ. இந்த மழை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கழிமுகப் பகுதியில் மிகவும் குறைந்து காணப்படுகிறது. பாசனப் பகுதியின் சராசரி மழை அளவு 750 மி.மீ. இதில் பெரும் பகுதி, 446 மி.மீ, வட கிழக்குப் பருவ மழை மூலம் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் கிடைக்கிறது என்றாலும் பருவ மழையின் ஏற்றத்தாழ்வு மிக அதிகம். வடகிழக்குப் பருவத்தில் நான்கு ஆண்டுகளில் மூன்று ஆண்டுகளில் நிச்சயம் கிடைக்கும் என்று பார்க்கும்போது 238 மி.மீ. மழை மட்டுமே எதிர்பார்க்க முடிகிறது.

மாதத்தின் சராசரி அதிக வெப்பம் மே திங்களில் 36.4 செ.கி. குறைந்த அளவு டிசம்பர் 30.2 செ.கி. இதேபோல் குறைந்த அளவு சராசரி வெப்பம் சனவரியில் மிகக்குறைந்தும் (22.3 செ.கி) மே திங்களில் அதிகமாகவும் (27 செ.கி) காணப்படுகிறது.

காற்றின் ஈரப்பதம் வடமேற்குப் பருவமழை பருவத்தில் அதிகம்.

காற்றின் வேகம் சூன்-செப்டம்பர் பருவத்தில் அதிகமாகவும், அக்டோபர்-டிசம்பர் பருவத்தில் மிதம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

**மண்** மிதமான வளம் கொண்ட வண்டல் மண் சில இடங்களில் மணல் கலந்தும் காணப்படுகின்றன. சற்றே அமில நிலமாகும் (PH 5.0-6.0).

**கிராம சமூகம்** இந்து, முஸ்லீம், கிருத்துவர்கள் ஆகிய இனத்தவர்கள் வாழும் கிராமமாகும். இந்துக்களிலேயே பல சாதிகள் என்றாலும் சங்கத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு நல்லிணக்கத்தோடு வாழும் கிராமம் வாகைகுளம்.

1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள்தொகை 2,188. இதில் ஆண்கள் 1,065 பெண்கள் 1123. மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதி தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்.

வாகைகுளம் மக்கள் ஆழ்ந்த தெய்வபக்தி கொண்டவர்கள். இரண்டு புராதனக் கோயில்கள் இப்பகுதியில் காணப்படுகின்றன. இக்கோயில்களில் தினசரி வழிபாடு தவறாமல் நடைபெற்று வருகின்றது.

பக்கத்துக் கிராமமான பிரமதேசம் தொன்றுதொட்டு வட்டத் தலைமையகமாகத் திகழ்ந்தது. சமீபத்தில்தான் வட்டத் தலைமையகம் அம்பாசமுத்திரம் பேரூருக்கு மாற்றம் பெற்றது. அம்பாசமுத்திரம் வாகைகுளத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் உள்ளது.

பல சமுதாயங்களைச்சார்ந்த முதலியார், மூப்பனார், தேவர், செட்டியார், ஆசாரியார், நாயுடு, நாடார், வெள்ளாளப்பிள்ளை, முஸ்லீம், தாழ்த்தப்பட்டோர் இக்கிராமத்தில் வாழ்கின்றனர். வேளாண்மைதான் இவர்களின் முக்கிய தொழில். பாத்திரத்தொழில் ஆசாரியார்களால் துவக்கப்பட்டது. இப்போது பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் இத்தொழிலை மேற்கொண்டுள்ளனர். விவசாயத்தொழிலில் கிடைப்பதைக்காட்டிலும் அதிக வருமானம் கிடைப்பதே இந்தப் பாத்திரத்தொழிலை நாடிப் பலர் ஈர்க்கப்படுவதன் காரணமாகும். இச்சிறு தொழிற்சாலைகளில் உருவாக்கப்படும் குடம், மணி முதலியன அம்பாசமுத்திரத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

**குத்தகை** நிலக்குத்தகை அதிகம் கிடையாது. குறிப்பாக ஆசாரியார்கள் மட்டும் தங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விடுகின்றனர். வாரம்தான் வழக்கில் உள்ளது. ஒரு ஆண்டிற்கு இரண்டு போகத்திலிருந்து 24 மூட்டை நெல் வாரமாகக் கொடுக்க வேண்டும். ஒரு போகத்திற்கு வாரம் 12 மூட்டை நெல். விளையும் நெல்லில் பாதியை வாரமாகக் கொடுக்கவேண்டியுள்ளது. இது மிகவும் அதிகம் என்று சாகுபடியாளர்கள் கருதுகின்றனர்.

**ஆராய்ச்சி நிலையம்** தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நெல் ஆராய்ச்சி நிலையம் அம்பாசமுத்திரத்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளாகச் செயற்பட்டுவருகிறது. தாமிரவருணி பாசனப் பகுதிக்கேற்ற பல நெல் இரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. உயர்

விளைச்சலுக்கான உழவியல் முறைகளும், பயிர்ப் பாதுகாப்பு நுட்பங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

**பயிர்த்திட்டம்** தண்ணீர் கிடைக்கும் பத்து மாதங்களில் (ஜூன் முதல் மார்ச் வரை) இரண்டு போகம் நெல் பயிராக சாகுபடியாகிறது. கார்ப் பயிர் ஜூன் மாதம் விதைத்து ஜூலை மாதம் நடவு செய்து செப்டம்பரில் அறுவடைக்கு வருகிறது. 120 நாட்களுக்குள் முதிர்ச்சியுறும் குறுகிய கால இரகங்கள் சாகுபடிக்கு உபயோகிக்கப்படுகின்றன. தொடர்ந்து பயிர் செய்யப்படும் பிசாணம் பிப்ரவரி மார்ச்சில் அறுவடைக்கு வருகிறது. முன் பருவமாக இருந்தால் 135 நாள் வயதுடைய இரகங்களும் பின்பருவத்திற்கு 120 நாளில் முதிர்ச்சியடையும் குளிர்தாங்கி வளரும் இரகங்களும் பயிரிடப்படுகின்றன.

வாழை தாமிரவருணியின் சில பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. வாகைக்குளத்தில் குறைந்தபரப்பில் வாழை (8 எக்டேர்) பயிரிடப்படுகிறது.

**செயல் மாற்றம்** வேளாண்மை வாகைகுளம் மக்களின் வாழ்வோடு ஒன்றியது. விவசாயம் ஒன்றுதான் வருமானத்திற்கான வழி. நெல் முக்கிய பயிர். பயிர் சாகுபடிக்கு வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் மூலம் பெறும் தாமிரவருணி ஆற்று நீர்தான் பாசனத்திற்கான ஒரே ஆதாரம். பெரும்பாலோர் சிறு விவசாயிகள். இரண்டு எக்டேர் வரை நிலமுள்ள ஒரு சில விவசாயிகளின் நிலங்களும் துண்டு துண்டாகப் பல இடங்களில் பரவிக்கிடக்கின்றன.

வாகைகுளம் கடினப்பாறை கொண்ட பூமியாகும். கிணறு தோண்ட பணச்செலவு மிக அதிகம். நிலத்தடி நீரும் மிகக்குறைவு. ஆகவே வாகைகுளம் பாசனப்பகுதியில் ஒரு கிணறுகூடக் கிடையாது. இது ஒரு ஆச்சரியமாகும்; ஆனால் உண்மை. தமிழகத்தின் பாசனப் பரப்பில் 40 சதம் நிலத்தடி நீர்ப்பாசனம். பல இடங்களில் ஆறு, குளத்து நீருடன் கிணற்று நீரும் இணைந்து பாசனத்திற்கு உபயோகிக்கப்படுகிறது.

வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் மலைச்சரிவில் வரும் பகுதியில் ஒவ்வொரு மழையின்போதும் வண்டல் சேர்ந்து விடுகிறது. தலைமடை, இடைமடைப் பகுதி விவசாயிகளின் நிலம் வாய்காலின் தாழ்வான பகுதியில் இருப்பதாலும் மடை திறந்தவுடன் தண்ணீர் வேகமாக வருவதாலும் அப்பகுதியினருக்கு நீர் கிடைப்பதில் பிரச்சனை இல்லை. தண்ணீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுபவர்கள் வாகைகுளம் விவசாயிகளும் கீழ்ப்பகுதி பாசனதாரர்களும்தான். கால்வாயைத் தூர் எடுத்து நீரைக் கொண்டுவரும் செயலை ஏற்றுக்கொள்ளக்கூடிய பெரும் தனக்காரர்கள் யாரும் இப்பகுதியில் கிடையாது. தனிப்பட்டோர் பாசன நிர்வாகிகளை அணுகும்போது பலன்தரும் முடிவு ஏதும் கிடைப்பதில்லை. ஆகவே பாசன நீர் போதிய அளவு கிடைக்கச்செய்ய பாசனதாரர்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டிருந்தது.

1950ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நிலச்சீர்திருத்தச் சட்டம் தமிழகத்தில் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் ஒருவர் அதிக அளவாக 6 எக்டேர் நன்செய் நிலம்தான் வைத்துக்கொள்ள முடியும். நில உடைமை குறைந்த பின் நேரடியாக நிர்வாகிகளை அணுகித் தங்களின் கோரிக்கைகளைப் பெறுவதும் முடியாததாகிவிட்டது. பாதிப்புக்கு உள்ளான சில விவசாயிகள் நில உடைமையாளர்களின் உரிமை காக்கப்பட வேண்டுமானால் நில உடைமையாளர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று எண்ணினர். இவ்வெண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கச் சிவக்கொழுந்து முதலியார் பொறுப்பேற்றார். சங்கர அய்யரும், இராமசாமி அய்யரும் ஒத்துழைப்பு தந்தனர். இவர்கள் ஒன்றுபடவேண்டும் என்ற உந்துதலோடு இருந்த வாகைகுளம் பாசனப்பகுதி விவசாயிகளை அணுகி முக்கியமான இரண்டு நோக்கங்களை முன்வைத்தனர்.

1. ஆனந்தகுளம், அரசரடிக்குளம், சிங்கங்குளம், வாகைகுளம் ஆகிய நான்கு குளங்களுக்கும் குறிப்பிட்ட காலத்தில் போதுமான அளவில் நீர் கிடைக்க முயற்சி மேற்கொள்வது, முதல் மூன்று ஏரிகளுக்கு 49வது மதகு மூலம் தண்ணீர் கிடைக்கிறது.
2. நில உடைமையாளர்கள் உரிமையைப் பாதுகாப்பது.

சிவக்கொழுந்து முதலியார் பெருந்தனக்காரர், நேர்மையாளர், பொது சேவையில் ஈடுபாடு கொண்டவர், விவசாயிகளிடம் நன்மதிப்பு பெற்றவர். 1958, 1959ஆம் ஆண்டில் இவர் பெருமுயற்சி எடுத்து ஒவ்வொரு விவசாயியையும் அணுகி ஒன்றுபடவேண்டும் என்ற எண்ணத்தை மேலோங்கச் செய்தார். இவர் முயற்சியால் 1959ஆம் ஆண்டில் உருவானது 'வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் நில உடைமையாளர் சங்கம்' இச்சங்கம் சனவரி 20, 1960ஆம் ஆண்டு சேரன்மாதேவி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது (பதிவு எண். 2/60) இது விவசாயிகளின் சொந்த முயற்சியால் ஒரு முக்கிய நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட சங்கம். இதில் அரசின் தூண்டுதலோ, தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்போ, எதுவும் கிடையாது.

## தற்போதைய நிலைமை

வாகைகுளத்தில் பலதரப்பட்டோர் வசிக்கின்றனர். நில உடைமையாளர்கள் அனைவரும் வாகைகுளம் சங்கத்தில் உறுப்பினராகலாம். கிராமத்தில் வசிக்கும் ஒவ்வொரு சமூகத்தினரும் தங்கள் மக்கள்தொகை விகிதத்தில் செயற்குழுவில் உறுப்பினராகப் பங்கேற்பர். செயற்குழு உறுப்பினர் 15 பேர் இதில் நாடார் 1, நாயுடு 1, பிள்ளை 1, செட்டியார் 2, முஸ்லீம் 1, தேவர் 2, மூப்பனார் 2, ஆசாரியார் 2, கிருத்துவர் 1, தாழ்த்தப்பட்டோர் 2. இந்த 15 உறுப்பினர்களுடன் அம்பாசமுத்திரத்தைச் சார்ந்த ஒருவரும் பிரேமதேசம் கிராமத்தைச் சார்ந்த ஒருவரும் இணைத்துக் கொள்ளப்படுவர்.

ஒவ்வொரு ஆண்டும் ஆற்றில் தண்ணீர் திறந்துவிடப்படும் ஜுன் 1க்கு முன்பாக மகாசபை மே மாதத்தில் கூடும். இத்தருணத்தில் ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் தனித் தனியே கூடி தங்களுக்கெனச் செயற்குழு உறுப்பினர்களைத் தேர்வு செய்வர். தேர்வு செய்யப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒரு தலைவர், ஒரு செயலர், ஒரு பொருளாளரைத் தேர்ந்தெடுப்பர். இந்த பொறுப்பாளர்களின் பதவிக்காலம் ஒரு ஆண்டு. ஒருவரே மீண்டும் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

## சங்க நோக்கங்கள்

அ. ஆனந்தகுளம், அரசரடிக்குளம், சிங்கங்குளம், வாகைகுளம் ஆகிய நான்கு குளங்களுக்கும் குறிப்பிட்ட நாட்களில் போதுமான அளவு கால்வாய் மூலம் நீர் கொண்டுவருவது, கிடைக்கும் நீரை எல்லோருக்கும் பகிர்ந்தளித்தல்.

ஆ. வடக்கு கோடை மேலழகியான் கால்வாயினைத் தூர் எடுக்கவும் நிர்வகிக்கவும், தக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

இ. வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் நில உடைமையாளர்களின், விவசாயிகளின் உரிமைகளையும், தேவைகளையும் பாதுகாத்தல்.

ஈ. விஞ்ஞான வழிமுறைகளை மேற்கொண்டு நெல் உற்பத்தியைப் பெருக்குதல்.

உ. விவசாயிகளிடையே நல்லெண்ணத்தையும், இணக்கத்தையும், ஒற்றுமையையும் பேணிக்காத்தல்.

ஊ. கட்டுபடியாகக்கூடிய கூலி நிர்ணயித்தல், ஏற்புடைய 'வாரம்' மேற்கொள்ளல்.

எ. கிராமப் பொருளாதார மேம்பாட்டுக்கும் உழவர்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கும் பாடுபடுதல்.

## தலைவரின் பொறுப்புகள்

* மகாசபை, (பொதுக்குழு) செயற்குழு கூட்டங்களில் தலைமை ஏற்றல்.
* சங்க நோக்கங்கள் நிறைவேற நடவடிக்கை மேற்கொள்ளல்.
* முக்கிய நிகழ்வுகளில் முடிவெடுத்தல்
* உறுப்பினர்களிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைத்தல்.
* சங்க முன்னேற்றங்களுக்காகப் பாடுபடல்.

## செயலரின் பொறுப்புகள்

* செயற்குழுவில் முடிவெடுக்கப்பட்டவற்றின் மேல் நடவடிக்கை எடுத்தல்

* வரவு செலவுக் கணக்கு வைத்திருத்தல்

* மகாசபை, செயற்குழு கூட்டங்களைக் குறிப்பிட்ட காலத்தில் கூட்டுதல்

* சங்க நிகழ்வுகளின் பேரில் கடிதப்போக்குவரத்து மேற்கொள்ளல்

* நீர்ப் பங்கீடு சம்பந்தமாக எழும் பிரச்சனைகளை, சச்சரவுகளைத் தலைவருடன் கலந்து தீர்த்து வைத்தல்.

## பொருளாளரின் பொறுப்புகள்

* நிதி சம்பந்தமான நிகழ்வுகளுக்குப் பொறுப்பேற்றல்

* செயலர், பொருளாளர் கூட்டுக் கணக்கில் அம்பாசமுத்திரம் கூட்டுறவு வங்கியில் கணக்கு வைத்திருத்தல்

* கையில் ரூ. 200/-க்கு மேற்படாமல் வைத்திருந்து முக்கிய செலவுகளைச் செய்தல்.

* ரூ. 200/- மேற்படும் செலவினங்களைச் செயற்குழு ஒப்புதல் பெற்றுச் செய்தல்.

**பொதுக்குழு** (மகாசபை) ஆண்டுக்கு ஒரு முறை கூடி கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயற்குழு உறுப்பினர்கள் (15), பொறுப்பாளர்கள் (தலைவர், செயலர், பொருளாளர்) தேர்ந்தெடுத்தல், அமர்த்தப்படவேண்டிய காவலர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கான சம்பளம் முடிவுசெய்தல், கால்வாய் சுத்தம் செய்யத் திட்டமிடல் பொருளாளர் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையை உறுப்பினர்கள் ஆய்வுக்கு வைத்து ஒப்புதல் பெறுதல். ஊர் நலனுக்காகவும், பாசனச் சம்பந்தமாகவும் மேற்கொள்ளவேண்டிய பிற முக்கிய பணிகள்.

## திட்ட நிர்வாகம்

வடக்கு கோடை மேலழகியான கால்வாய் பொதுப்பணித்துறையின் நிர்வாகத்தில் உள்ளது. கண்காணிப்புப் பொறியாளர், திருநெல்வேலி, இரு மாவட்டங்களிலும் (திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டம்) நடைபெறும் பொதுப்பணித் துறை நிர்வாகத்தில் நடைபெறும் வேலைகளனைத்தையும் மேற்பார்வையிடுகிறார். அவரின் கீழ் செயல்படும் செயற்பொறியாளர் (O&M) தாமிரவருணி ஆற்றின் செயலாக்கம் மற்றும் நிர்வாகப்பொறுப்பை மேற்கொள்கிறார். உதவி நிர்வாகப் பொறியாளர் சேரன்மாதேவி, உள்கோட்டப்பொறியாளராகக் கால்வாயின் செயலாக்கம், சீரமைப்பு, நீர் பகிர்ந்தளித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறார். உதவிப் பொறியாளர், அம்பாசமுத்திரம் கோடை மேலழகியான் நிர்வாகப்பணி, கால்வாய் சீரமைப்பு, நீர் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றைக் கண்காணிக்கிறார்.

இளநிலைப் பொறியாளரின் கீழ் ஒரு பணி ஆய்வாளர் மற்றும் 3 பாசன உதவியாளர்கள் பணியாற்றுகின்றனர். ஒரு பாசன உதவியாளர் இடம் காலியாக உள்ளது. ஒருவர் அணையைப் பார்வையிடுகிறார், மற்றவர் வடக்கு கோடை மேலழகியான் கால்வாயில் உள்ள அனைத்து மதகுகளையும் (63 மதகுகள்) செயல்படுத்துகிறார். ஆதலால் நீர் பகிர்ந்தளித்தல், கால்வாய் பராமரிப்பு பணிகளை சரியாக மேற்பார்வையிட முடியவில்லை.

நீர்வள ஒருங்கிணைப்புத் திட்டச் செயலாக்கத்தின் போது 500 எக்டர் அளவில் பாசனப் பொறுப்பை உபயோகிப்பாளரிடம் ஒப்படைக்க அரசு முடிவெடுத்திருப்பதால் கீழ்நிலைப் பணியாளர்கள் இடம் காலியாகும் போது அரசு மாற்று ஆள் நியமனம் செய்வதில்லை. நிர்வாக மாற்றம் ஏற்படும் போது இப்பணிகளை மேற்கொள்ள பாசனதாரர்களே மடை கண்காணிப்பு உதவியாளர்களை நியமித்துக்கொள்ள இது ஏதுவாக இருக்கும்.

## சங்கப்பணிகள்

வாகைகுளம் பாசன மேலாண்மையை முக்கியமாகச் சங்கத் தலைவரும் செயலரும் கவனித்து வருகின்றனர். சங்கத்தின் பணிகள் ஐந்து வகை எனச் சொல்லலாம்.

1. வாகைகுளத்திற்குத் தண்ணீர் கொண்டுவருதல்
2. தண்ணீர்ப் பங்கீடு
3. சீரமைப்புப் பணிகள்
4. நிதி சேகரித்தல்
5. பிணக்குகள் தீர்த்துவைத்தல்

**நீர் கிடைக்கச் செய்தல்** ஆண்டுதோறும் ஆற்றில் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடுவதற்கு (சூன் 1) முன்பாக மே மாதத்தில் மகாசபை கூடுகிறது. இப்பொதுக்குழுக் கூட்டத்தில் குளத்திற்குத் தேவையான தண்ணீர் வந்துசேரும் வகையில் வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் தூரெடுத்தல், சுத்தம் செய்தல் பற்றிய விவரம் விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்படுகிறது. மலை அடிவாரத்தில் வரும் கால்வாயில் ஒவ்வொரு மழைக்கும் வண்டல் வந்து படிவதாலும், ஆக்கிரமிப்புப் பகுதியிலும் பிற இடங்களிலும் களைச்செடிகள் வளர்ந்து நீரோட்டத்தைப் பாதிப்பதாலும் ஆண்டுக்கு ஒரு முறை பெரும் செலவில் கால்வாய் சுத்தம் செய்தல் பற்றிய விவரம் விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்படுகிறது. மலை அடிவாரத்தில் வரும் கால்வாயில் ஒவ்வொரு மழைக்கும் வண்டல் வந்து படிவதாலும், ஆக்கிரமிப்புப் பகுதியிலும் பிற இடங்களிலும் களைச்செடிகள் வளர்ந்து நீரோட்டத்தைப் பாதிப்பதாலும் ஆண்டுக்கு ஒரு முறை பெரும் செலவில் கால்வாய் சுத்தம் செய்தல், 2-3 முறை வண்டல் எடுத்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சங்கப் பொறுப்பாளர்கள் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு மாவட்ட ஆட்சியாளர், கண்காணிப்புப் பொறியாளர் ஆகியோரை நேரில் சந்தித்துக் கோரையாறு வடக்கு கோடை மேலழகியான் கால்வாயைக்

கடக்குமிடத்தில் கால்வாய் நீர் ஆற்றுக்குக் கீழே செல்லும் வகையில் பாலம் அமைத்துக்கொடுக்க வழிவகை செய்தனர். பாலம் 1981ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டில் வெள்ளப்பெருக்கால் கால்வாய் கரை உடைப்பு எடுத்த சமயத்தில் சங்கம் விரைந்து செயல்பட்டு உடைப்பு விரைவில் அடைக்கப்பட்டது. கால்வாயில் படிந்த வண்டலும் அகற்றப்பட்டது. இவை மேல் நிலை அதிகாரிகளுடன் சங்கம் கொண்டுள்ள சமூக உறவிற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

1994ஆம் ஆண்டில் டிசம்பர் முதல் வாரம் பெய்த பெருமழையால் கால்வாயில் வண்டல் படிந்துவிட்டது. வண்டலை அகற்றினால்தான் போதுமான நீர் குளத்திற்குக் கிடைக்கும் என்ற நிலை, இருந்தது. பொதுப் பணித்துறையினர் போதுமான நிதி தங்களிடம் இல்லை என்றும் தாங்கள் 40 ஆட்களுக்கு மட்டும் கூலி தரமுடியும் எனவும் தெரிவித்தனர். தூர் எடுக்க 100 ஆட்கள் தேவைப்பட்டனர். சங்கச் செயற்குழு கூடி சங்கம் 40 ஆள் கொடுப்பது என்றும் கீழ்மதகியிலுள்ள புதுக்குளம் ஞானப்பட்டர்குளம் பாசனதாரர்கள் தலா 10 ஆள் தருவது எனவும் முடிவெடுக்கப்பட்டது. வண்டல் அகற்றும் பணி மறுநாளே துவங்கி டிசம்பர் 16 தேதியில் நிறைவுற்றது. கால்வாய் மேற்பார்வையாளர், வாகைக்குள சங்கச் செயலர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் பணியினை மேற்பார்வையிட்டனர். அரசு நிர்வாகப் பொறுப்பில் பங்கேற்கும் பாங்கு இந்த நிகழ்வு மூலம் தெளிவாகிறது.

குளத்தில் உள்ள ரெகுலேட்டர் பலகை (பதவு) பழுதடைந்து குளத்திலிருந்து மதகு மூலம் தண்ணீர் பகிர்ந்தளிக்க இயலாத நிலையில் பதவு நிர்வாகத்தினரால் சீர்படுத்திக்கொடுக்கப்பட்டது. இதில் பதவு அமைக்கும் செலவான ரூ.1,500/- சங்கமே ஏற்றுக்கொண்டது. முழு செலவும் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற நிலையிலும் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு சங்கம் நிதி உதவி நல்கியது நல்லிணக்கத்திற்கு மேலும் அடிகோலுவதாக அமைகிறது.

கால்வாயில் உள்ள மதகுகள் ஒன்றிலும் தடுப்புப்பலகை (பதவு) பொருத்தப்படவில்லை. மணல் மூட்டை, குப்பைகூளம் கொண்டுதான் மதகு அடைக்கப்படுகிறது. தண்ணீர் கிடைக்க அடைப்பை எடுக்கும் முதல் பகுதி மதகுதாரர்கள் உடனே அடைப்பதில்லை. இதேபோன்று மீன் பிடிப்பதற்கும் மதகு திறக்கப்படுகிறது. பெரும்பாலான மதகுகளில் கசிவு தொடர்ந்து இருந்து வருகிறது.

தாமிரவருணி புராதனப் பாசனத்திட்டமாதலால் சீரமைப்புப் பணிக்காகப் பெரும் நிதி தேவைப்படுகிறது. ஆதலால் போதுமான அளவு செயல்படமுடியாத நிலையிலிருப்பதாகப் பாசன நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

போதுமான கண்காணிப்பு இல்லாத நிலைமையைத் தலைமடைப்பகுதி பாசனதாரர்கள் ஒரு அனுகூலமாக எடுத்துக்கொள்கின்றனர்.

கால்வாய்த் தண்ணீர் குளத்திற்கு வந்து சேர காலதாமதமாகிறது. குளம் நிரம்ப மேலும் சில நாட்கள் ஆகும் ஆதலால் வாகை குளத்தின் ஓரமாக ஒரு வாய்க்கால் எடுத்து முதல் மடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தப் புறக்கால்வாய் அரசு நிர்வாகத்தின் மூலம் பூச்சு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் குளம் நிரம்புமுன் நேரடியாகக் கால்வாய்த் தண்ணீரை நாற்றங்காலமைக்க உபயோகிக்கப்படுகிறது.

வாகைகுளம் ஒவ்வொரு ஆண்டும் தூரெடுக்கப்படுகிறது. தங்கள் நிலங்களின் வளத்தைப் பெருக்கவும் நீர் பிடிப்புத்தன்மையை அதிகரிக்கவும் குளத்தில் வண்டல் மண்ணை எடுத்துச் செல்கின்றனர். இதன் மூலம் தேவைக்கு அதிகமாக (மடை அளவுக்குக் கீழே) தோண்டப்பட்டு விடுகிறது என்ற நிலைமைகூட உருவாகிறது.

தண்ணீரிலேயே தழைத்து வளரும் ஆகாயத்தாமரை, நெய்வேலிக் காட்டாமணக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் பரவிவருகின்றன. இது சுத்தம் செய்வதில் சிரமத்தையும் பொருட்செலவையும் ஏற்படுத்துகிறது.

**நீர்ப் பங்கீடு** வாகைகுளத்தில் மூன்று மடைகள் உள்ளன. பெரும்பாலும் முதல் மடைதான் எப்போதும் உபயோகிக்கப்படுகிறது. மூன்றாவது மடை குளத்தின் வலப்புறம் கால்வாய் மூலம் நேரடிப் பாசனம் பெறும் (50-53வது மதகுகள்) வயல்களுக்கும் கீழ்ப்பகுதி நிலங்களுக்கும் பாசனம் அளிக்கிறது. கார்ப் பருவத்தின் தொடக்கத்தில் சில நாட்களுக்கு மட்டும் பாசனம் அளிக்க உபயோகப்படுகிறது.

வாகைக்குளம் பாசனப் பகுதி நில அமைப்பு இருபக்கமிருந்தும் சரிந்து நடுவில் பள்ளத்தாக்காக அமைந்து வடிகால் நடுவே செல்லும் வண்ணம் உள்ளது.

50,51,52,53 வது மதகு மூலம் பாசனம்பெறும் நிலம் மேடுபள்ளமாக இருப்பதால் மூன்றாம் மதகு நீர்ப் பாசன நிலத்தில் வடிகிறது. ஆகவே குளத்திலிருந்து தண்ணீர் பாய்ச்ச வேண்டிய சூழ்நிலை ஆரம்பகட்டம் தவிர, தேவையற்றதாகிறது.

நேரடிப்பாசன விவசாயிகள் தாங்களே நீர்பாய்ச்சிவிடுகின்றனர்.

கார்ப் பருவத்தின் ஆரம்பத்தில் இரண்டு மாதம் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கும். தட்டுப்பாட்டுக் காலங்களில் காவலர்களே நீர் கட்டியாகவும் செயல்படுகின்றனர். மற்ற பருவங்களில் மடை திறப்பதோடு சரி, குளத்தில் நீரளவு 4 அடி எட்டியபிறகே பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிடப்படும்.

வாழைத் தோட்டத்திற்கு வயல்களில் பாய்ச்சப்படும் கசிவு நீரே போதுமானதாகிறது. கோடையிலும் கார்ப் பருவத் துவக்கத்திலும் மட்டும் வாழைக்கு நீர் பாய்ச்சப்படுகிறது.

சங்கப் பொறுப்பாளர்களின் ஆலோசனையின் பேரில் கால்வாய்களில் காவலர்களில் ஒருவர் பாசனமதகு திறப்பார். பகல் நேரத்தில் மட்டுமே பாசனமதகு திறக்கப்படும். மாலையானவுடன் மதகு அடைக்கப்படும். சுழற்சி முறைப்பாசனம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதால் பாசனத்தில் சிரமம் ஏதும் இல்லை. நிலம் உழவு செய்தல், நடவு ஆகிய சமயங்களில் மட்டும் சுழற்சி முறையில் மாற்றம் ஏற்படும்.

தேவைப்படுபவர்கள் தலைவரிடம் சொன்னால் காவலர் மூலம்தேவை அறிந்து பாசனத்திற்கு நீர் அளிக்கத் தலைவர் ஏற்பாடு செய்வார்.

வாழைப்பயிர் 8 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. கிணறு இல்லாத நிலையில் கோடையிலும் குளத்து நீர் தேவைப்படும் இந்நிலங்களுக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை தண்ணீர் கொடுக்கப்படும். கார் பருவத்திலும் குளத்துக்குத் தண்ணீர் வந்தவுடன் முன் உரிமையாக வாழைக்கு பாசனம் வழங்கப்படுகிறது.

இதேபோல் நாற்றங்காலுக்கும் முன் உரிமை உண்டு. நிலப்பரப்பு மேடு பள்ளம் உள்ளதனால் சில வயல்களில் வாய்க்கால் நீர் ஏறிப்பாய வாய்ப்பில்லை. இந்நிலங்களுக்கு வாய்க்காலில் தடுப்பு வரப்பு அமைத்துத்தான் பாய்ச்ச வேண்டும்.

இப்பாசனதாரர்கள் புதன், சனி ஆகிய இரு நாட்களில் மட்டும் வாய்க்காலைத் தேக்கி நீர் பாய்ச்ச ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதிலும் சுழற்சி முறை மேற்கொள்ளப்பட்டுப் பாசனம் செய்யப்படுகிறது.

நீர்ப்பாசனம் பற்றிய இரு நிகழ்ச்சிகளில் எவ்வாறு முடிவெடுக்கப்பட்டது என்பது சுவையானதாகும்.

சனவரி 20, 1995 அன்று பானிப்பட்டு கிராம விவசாயி ஒருவர் பாசனத்திற்கு நீர் திறந்துவிடும்படி அலுவலகத்தில் இருந்த பொருளாளரைக் கேட்டார். அந்த விவசாயி வாய்க்காலைச் சுத்தம் செய்யும்படி பணிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் வாய்க்காலைச் சுத்தம் செய்யவில்லை. பொருளாளர் வாய்க்காலைச் சுத்தம் செய்த பிறகுதான் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று உறுதியாகக் கூறிவிட்டார். மறுநாள் 5 ஆளை வைத்து வாய்க்காலைச் சுத்தம் செய்தபின் பாசனமடை திறந்து அவருக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டது.

பிப்ரவரி 19, 1995 மாலை 4.00 மணி பன்னாட்டுப் பாசன மேலாண்மை நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் சக்திவடிவேலும், டாக்டர் சுப்பிரமணியனும் சங்கத்தலைவர் மாயாண்டி மூப்பனாரிடம் உரையாடிக் கொண்டிருந்தனர். சில உறுப்பினர்களும் அங்கிருந்தனர், இரண்டு

கடைமடை விவசாயிகள் தங்கள் நெற்பயிருக்குத் தண்ணீர் தேவைப்படுகிறது தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்யுங்கள் என்று கோரிக்கை வைத்தனர்.

நெல் முதிர்ந்து அறுவடை நிலையில் இருந்ததால் தண்ணீர் திறந்துவிட்டால் பயிர் கெட்டுவிடும். அதுவே மதகுப் பலகையைச் சிறிது தூக்கிவிட்டு அடியில் அடைத்திருக்கும் கூளம் சக்கைகளை எடுத்துவிட்டு மீண்டும் மூடிய பிறகு வரும் கசிவு நீரே போதுமானது என்று தலைவர் கூறினார். விவசாயிகள் மன நிறைவுபெறவில்லை. ஒரு உறுப்பினர் தடுப்புப்பலகையின் முதல் துளை வரை உயர்த்தினால் (1/3 பாய்ச்சல்) வரும். நீர் விளைந்த பயிரை சேதப்படுத்தாமல் பாய்ச்சலாம் என ஆலோசனை கூற, அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. காவலர் மதகு திறக்கப் பணிக்கப்பட்டனர். விவசாயிகளும் மன நிறைவோடு பாசனம் மேற்கொள்ள விரைந்தனர்.

இச்சிறு நிகழ்வுகள் நீரைப் பங்கீடு செய்வதில் எவ்வாறு முடிவெடுக்கப்படுகிறது, நீர் திறப்பதால் ஏற்படும் விளைவுகளைச் சீர்தூக்கிப்பார்க்கும் நுண்ணுணர்வு, முடிவை உறுப்பினர்கள் மன நிறைவோடு ஏற்றுக்கொள்ளும் பாங்கு ஆகியவை புலனாகின்றன.

**பராமரிப்பு** வடக்கு கோடை மேலழகியான் கால்வாயில் முதல் 4-5 கி.மீட்டர் நீளம் வண்டல் எடுப்பதிலும் சுத்தம் செய்வதிலுமே பெரும் தொகை செலவாகிறது. சங்கத்தினர் தாங்களே அல்லது அரசு நிர்வாகத்துடன் இணைந்து இப்பணியை ஆண்டுதோறும் மேற்கொள்கின்றனர். டிசம்பர் 14,15,16, 1994ல் நிர்வாகத்துடன் இணைந்து கால்வாய் சுத்தம் செய்த நிகழ்வினை முன்பே கண்டோம்.

கால்வாயில் படிந்த வண்டலை எடுப்பது, படர்ந்திருக்கும் செடிகளை, பூண்டுகளை அகற்றுவது இவையே முக்கிய பராமரிப்புப் பணிகளாகும். ஆண்டுக்கு ஒருமுறை சுத்தம் செய்வதும், 2-3 முறை வண்டல் அகற்றுவதும் முறையான பணியாக நிகழ்வுறுகின்றன.

ஆகாயத்தாமரை தற்சமயம் பெரும் தொல்லை கொடுக்கிறது. தண்ணீர் உள்ள இடங்களில் வளரும் இந்தக் களைச்செடி மிக விரைவில்

பன்மடங்காகப் பெருகி நீர் நிலையை ஆக்கிரமித்து விடுகிறது. இச்செடிகள் சிதைவுறும்போது ஒரு துர்நாற்றம் வீசுகிறது. சென்ற சில ஆண்டுகளாக இந்தக் களையை அகற்றுவதிலும் கணிசமான தொகை செலவிடப்படுகிறது.

பாசன வாய்க்காலை அருகாமையில் உள்ள நிலச்சாகுபடியாளரே சுத்தம் செய்து விடுகிறார். புறம்போக்கு, மேட்டுப்பகுதியில் செல்லும் இடங்கள், இவற்றில் மட்டும் சங்கச் செலவில் வாய்க்கால் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

கால்வாய் சுத்தம் செய்யும் பணியில் பக்கத்து கிராமங்களான அடயப்பத்து, சுமைதாங்கிக்குளம், சீர்பாண்டிக்குளம், புதுக்குளம், ஞானப்பட்டர்குளம் பாசனதாரர்களும் ஒத்துழைக்கின்றனர்.

**நிதி ஆதாரம்** சங்க உறுப்பினர்கள் ஆண்டுச் சந்தாவாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 12.50 வீதம் செலுத்துகின்றனர்.

2. காவலர் மூலம் சங்கம் செய்யும் பணிகளுக்காக ஒவ்வொரு சாகுபடியாளரும் (நிலச்சொந்தக்காரராக இருந்தாலும், குத்தகைதாரராக இருந்தாலும் பட்டி வரி செலுத்த வேண்டும்) பட்டி வரியாக ஏக்கருக்கு 25 கிலோ நெல் கொடுக்கின்றனர். காவலர் காவல்பணியில்தான் சிறப்பாக ஈடுபடுவதால் பிடிபட்ட மாடுகளை அடைக்கும் பட்டி (பவுண்ட்) இவ்வரிக்குப் பெயராக அமைந்துவிட்டது.

3. குளத்தில் மீன் குத்தகைப்பணம் ஊர் பொதுமக்கள் தங்களின் சமூக விகிதாச்சாரப்படி 14ல் 13 பங்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. மீதி ஒரு பங்கு சங்கத்திற்கு அளிக்கப்படுகிறது.

4. அறுவடை முடிந்ததும் வாத்து மேய்ப்பதற்காக வசூலிக்கப்படும் சிறு தொகையும் சங்கத்துக்குச் சேர்கிறது.

பகுதி நேர எழுத்தாளரால் காவலர்களின் துணையோடு சந்தா, பட்டி வரி வசூல் செய்யப்படுகின்றன. இவரே வரவு செலவுக் கணக்கும் எழுதுகிறார். சங்கத்தின் பெரும் பகுதி நிதி, கால்வாய் பராமரிப்பிற்கே

செலவிடப்படுவதை முன்பே கண்டோம். இது தவிர பகுதி நேர எழுத்தருக்கு மாதம் ரூ. 225/ சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது.

மற்ற பொறுப்பாளர்கள் தங்கள் பணிக்குப் பணம் ஏதும் பெறுவதில்லை. சேவை மனப்பான்மையோடு செயல்படுகின்றனர்.

**பிணக்குகள்** பாசனதாரர்கள் அனைவரும் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள விதி முறைகளைத் தவறாது கடைப்பிடிப்பதாலும் சங்க பொறுப்பாளர்கள் எடுக்கும் முடிவுகளை முழுமனதோடு ஏற்றுக்கொள்வதாலும் பிணக்குகள் ஏதும் ஏற்படுவதில்லை. ஏதேனும் சிறு தகராறுகள் ஏற்பட்டாலும் பொறுப்பாளர்கள் முக்கியமாக, தலைவர் தன் பண்பட்ட அணுகுமுறையால் எளிதில் முடித்து வைத்துவிடுகிறார்.

ஊர்ப்பொது நிர்வாகத்தில் சங்கம் தலையிடுவதில்லை. பாசன மேம்பாடு பற்றிய பணியில் மட்டும் கவனம் செலுத்திடுவது சிறப்பானதாகும். அதனால்தான் சங்கத்தில் இதுவரை அரசியல் தலையீடு இல்லை.

## சங்கக் கூட்டமைப்பு

சில ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா பல்கலைக்கழகம் வடக்கு கோடை மேலழகியான் கால்வாய்ப் பாசனச் சங்கங்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டது. அமெரிக்க உதவித் திட்ட பொருளுதவியோடு பல்கலைக்கழக நீர்வள மையத்தினால் துவங்கப்பட்ட இக்கூட்டமைப்பில், வாகைகுளம் சங்கத் தலைவர் செயலாளராக உள்ளார். இக்கூட்டமைப்பைப் பல்வேறு விவசாயிகளும் வரவேற்கின்றனர். கால்வாய் பாசனப்பகுதியில் ஏற்படும் பிணக்குகளைத் தாங்களே தீர்த்து வைத்துக்கொள்ள முடியும் என நம்புகின்றனர். பாசன நிர்வாகத்தினரைக் கால்வாய் மராமத்துப் பணிகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்க முடியும் எனக் கருதுகின்றனர். இக்கூட்டமைப்பின் முக்கிய குறிக்கோள் காலப்போக்கில் வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் நிர்வாகத்தைத் தாங்களே ஏற்றுக்கொள்வதாகும். நிதி உதவி இல்லாத காரணத்தால் அண்ணா பல்கலைக்கழகம் விலகிக்கொண்ட நிலையில் வடக்கு கோடை மேலழகியான் கால்வாய்ச் சங்கங்களின் கூட்டமைப்பு செயலிழந்து இருக்கிறது.

**விளைவும் பயனும்**

வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் நில உடைமையாளர்கள் சங்கம் துவங்கி 35 ஆண்டுகளுக்குமேல் துவளாமல் மேலும் தன் பணியினைச் சீர் செய்து கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கொள்கைகள் கோட்பாடுகள் மதிக்கப்படுகின்றன. சட்ட திட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. தலைமையின் முடிவுகள் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. தண்ணீரைக் குளத்திற்குக் கொண்டு சேர்க்கும் முக்கிய பணியில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கோரையாறு கால்வாயைக் கடக்கும் இடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாலம் கோரையாறும் மேலழகியான் கால்வாயும் தம் போக்கில் செல்ல வழி வகுத்துள்ளது.

1987ஆம் ஆண்டில் ஏற்பட்ட உடைப்பு, போர்க்கால அடிப்படையில் பொதுப்பணித்துறையும் சங்கமும் இணைந்து செயல்பட்டு, அடைக்கப்பட்டது.

காலதாமதமின்றி வயல் வேலைகள் மேற்கொள்ள வசதியாக வாகைகுளத்தில் புறக்கால்வாய் அமைத்து அதைச் செங்கல்கொண்டு கட்டிப் பூச்சும் கொடுக்கப்பட்டுள்ளது.

தேவையறிந்து சீராக நீர் திறந்துவிட முதல் மதகைப் பழுது பார்த்துப் புதுத் தடுப்புப் பலகையைச் (பதவு) சங்கங்கள் செலவில் அமைத்துக்கொண்டது.

கால்வாய் மராமத்துப் பணியைப் பிற பாசனதாரர்களோடும் அரசு நிர்வாகத்தோடும் இணைந்து செயல்படுத்துகிறது.

இவையனைத்தும் வாகைகுளத்திற்கு விரைவில் தேவையான அளவிற்கு நீர் கொண்டுவர வழிவகை செய்துள்ளன.

தண்ணீர் கிடைப்பதில் தட்டுப்பாடும் தாமதமும் வெகுவாக குறைக்கப்பட்டிருக்கிறது.

சங்கமே மடை திறப்புப் பணியை மேற்கொண்டு பாசனதாரர்களின் தேவையறிந்து சீரான முறையில் அனைவருக்கும் பகிர்ந்தளிக்க முடிகிறது.

சேதாரம் தவிர்க்கப்பட்டுத் தேவையானபோது தேவையான அளவு மட்டும் நீர் கொடுப்பதால், பயன்படுத்துவோர் பாசனப் பகுதியில் கிணறு இன்றியே வாழைச் சாகுபடி செய்ய முடிகிறது. வாழைச் சாகுபடியால் வருமானம் பெருகியுள்ளது. சீரான நீர்ப் பாசனத்தாலும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் தரும் தொழில் நுட்பத்தாலும் மகசூல் பெருகியிருப்பதோடு கூட நிரந்தரமாகவும் கிடைக்கிறது என விவசாயிகள் கூறுகின்றனர்.

அரசு அவ்வப்போது ஆலோசனைகள் சொல்லி வருகின்றது. பிற தொண்டு நிறுவனங்களோடு தொடர்பு இல்லை என்றாலும் அண்ணா பல்கலைக்கழகம் சங்கங்களின் கூட்டமைப்பு அமைக்கும் பணியைத் துவக்கியது சிறப்பானதாகும். எனினும் தொடர்ந்து அம்முயற்சியில் ஈடுபட முடியாமை ஒரு ஏமாற்றமே.

தன்னலமற்ற முறையில் சங்கத் தலைமை நடந்து கொள்வதால் பிணக்குகள், எழுவதில்லை; எழும்போதும் எளிதில் தீர்த்து வைக்கப்படுகின்றன.

நீர்ப் பங்கீட்டுக்காகப் பல நடைமுறை விதிகளைக் காலப்போக்கில் சங்கம் உருவாக்கியுள்ளது. முறை வைத்து நீர்ப்பாசனம் செய்தல், தட்டுப்பாட்டு நேரத்தில் சங்கமே நேரடியாகப் பாசனப் பங்கீட்டைக் காவலர் மூலம் செயற்படுத்துதல், மேட்டுப் பகுதிக்கு வாய்க்காலைத் தேக்கிப் பாய்ச்ச வாரத்தில் இரண்டு நாள் ஒதுக்கியிருத்தல், இரவு நேரப் பாசனத்தைத் தவிர்த்தல் ஆகிய கோட்பாடுகள் மதிக்கப்படுகின்றன. விதிகளை பாசனதாரர்கள் தவறாமல் பின்பற்றுகின்றனர்.

அரசையோ பிற நிறுவனங்களையோ எதிர்ப்பார்க்காமல் சங்கப் பணிகளுக்கு நில உடைமையாளர்கள், பாசனதாரர்கள் ஆகியோரிடமே நிதி வசூலிக்கப்படுகிறது. அவர்களின் வெளிப்படையான நிதிநிலை செயற்பாடு பாசனதாரர்களிடையே நிதி தேவையான செலவினங்களுக்குத்தான் பயன்படுத்தப்படுகின்றன என்ற நம்பிக்கையை வளர்த்துள்ளது.

சங்கத்திற்கென்று ஒரு கட்டிடம் உள்ளது; மற்ற வகையில் எவ்விதச் சொத்தும் கிடையாது.

நிதி நிலைமை மனநிறைவு தரத்தக்கவகையிலேயே உள்ளது; நிலுவை வைக்காமல் பாசனதாரர் சந்தா, பட்டிவரி செலுத்துவது நிதிநிலை மனநிறைவு தருவதற்குக் காரணம்.

சங்கம் பிறபணிகளில் ஈடுபடவில்லை என்றாலும் அரசுத்துறையினர் குறிப்பாக வேளாண்மை, கால்நடை, பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், பொதுப்பணித்துறை ஆகியவற்றோடு தொடர்புகொண்டு பயிற்சிக்கும் ஏற்பாடு செய்கின்றனர்.

சங்கம் மற்ற ஊர்விவகாரங்களில் ஈடுபடுவதில்லை. ஒரு வகையில் சங்கத்தில் அரசியல் புகாததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கும்.

கம்யூனிஸ்ட் கட்சியினர் தனிச்சங்கம் வைத்துள்ளனர். இச்சங்கம் பண்ணைத் தொழிலாளர்களின் ஊதியம், வேலைப்பளு, குத்தகை ஆகியவற்றில் மட்டும் தன் கவனத்தைச் செலுத்துகிறது. பாசனச் சங்கச் செயற்பாட்டில் எந்தவிதத்திலும் குறுக்கிடுவதில்லை.

இதேபோன்று திமுக, அதிமுக, மதிமுக, காங்கிரஸ் போன்ற அரசியல் கட்சிக்களின் தொண்டர்கள் தங்கள் அரசியல் பணியோடு சங்கச் செயற்பாட்டைத் தொடர்பு படுத்துவதில்லை.

சாதாரணமாக ஒரு விவசாயியின் முக்கியபணி தன் நிலத்துக்கு நீர் கொணர்வதும் அதைப் பாய்ச்சுவதுமாகும். வாகைகுளத்தில் இப்பணிகளைச் சங்கம் ஏற்றுக்கொண்டதால் விவசாயி உழவியல் முறைகளை மேற்கொள்ளல், இடுபொருள் சேகரித்தல், அறுவடை என்று பிற பணிகளில் தன் நினைப்பையும் நேரத்தையும் செலவிட்டு விளைச்சலையும் வருவாயையும் பெருக்கிக் கொள்ளமுடிகிறது. தங்கள் பாசனப் பிரச்சனை முழுமையையும் சங்கம் பார்த்துக்கொள்ளும் என்ற எண்ணம் சாகுபடியாளர்களிடம் இருப்பதை உணர முடிகிறது.

இந்தச் சங்கம் பல ஆண்டுகளாகச் சீரான தலைமை பெற்று இயங்கி வருவதால் இச்சங்கத் தலைவருக்கு மாவட்ட அலுவலர்கள் அளவில் நல்ல செல்வாக்கு இருப்பதைக் காணமுடிகிறது. இச்சங்கத் தலைவர் நேர்மையானவர் என்ற முறையில் தமிழகத்தின் பிறமாவட்டங்களில் நன்கு செயற்படும் சங்கங்களுக்கு அரசு செலவில் அழைத்துச் செல்லப்படுகிறார். பிற இடங்களிலிருந்து உழவர்களும், முக்கியமானவர்களும் சங்கத்தைப்பார்வையிட அடிக்கடி வருகின்றனர். நன்கு செயற்படும் சங்கத்தலைவர் என்ற வகையில் தலைவரின் தனிப்பட்ட மதிப்பும் உயர்ந்துள்ளது.

## சங்கத்தின் தொலை நோக்கும் விளைவுகளும்

சங்கம் தனிப்பட்டு இயங்குவதைவிட வடக்கு கோடை மேலழகியான் கால்வாயில் உள்ள பிற பாசனச் சங்கங்களோடும் இணைந்து ஒரு கூட்டமைப்பாகச் செயற்பட்டால் அரசு நிர்வாகிகளிடமிருந்து மேலும் பல உதவிகள் பெற முடியும் என்றும் கால்வாயைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ள ஏதுவாக அமையும் என்றும் எதிர்ப்பார்க்கின்றனர். பாபநாசம் அணைக்கட்டுக்குக் கீழே ஒரு தேக்கம் அமைத்தால் கால்வாய்க்கு வரும் வண்டல் மண் குறையும். வி.கே.புரம் தூயமேரி பள்ளிக்கு அருகாமையில் ஒரு பாலம் அமைத்தால், தற்சமயம் கோரையாறு கால்வாயைக் கடக்கும் இடத்தில் அமைந்திருப்பதுபோல, கால்வாயில் தூர் படிவது கணிசமாகக் குறையும். குளமேல் கால்வாயில் புறக்கால்வாய் அமைத்தால் விரைவாகத் தண்ணீர் வாகைகுளம் வந்து சேர வழி வகுக்கும்.

**1995** ஏப்ரல் திங்களில் திருநெல்வேலிப் பொதுப்பணித்துறைக் கண்காணிப்புப் பொறியாளரைச் சந்தித்தபோது சில கருத்துக்களைக் கூறினார்.

அ. நீர் வள ஒருங்கிணைப்புத் திட்டம் தமிழகத்தில் ரூ. **1140/-** கோடி செலவில் செயற்படுத்தப்படவுள்ளது. திருநெல்வேலி மாவட்டப் பாசனச் சீரமைப்புப்பணிக்கு ரூ. **18** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதுசமயம் 500 எக்டேர் வரையிலான பாசனப் பரப்பு கொண்ட கோட்டம் பாசனதாரர்களாலேயே நிர்வகிக்க வழி வகுக்கிறது.

ஆ. வடக்கு கோடை மேலழகியான் கால்வாயில் உள்ள 63 மதகுகளுக்கும் பூட்டி வைக்கும் வசதியுடன் பதவு பொருத்தப்படும்,

இ. கால்வாய் மலையடிவாரத்தில் செல்லும் பகுதியின் இடப்புறத்தில் ஒரு மீட்டர் அகலம் இருக்கும் வகையில் கரை அகலப்படுத்தப்படும். இத்தடுப்பு மலைச்சரிவிலிருந்து வண்டல் கால்வாயில் படிவதைத் தடுக்கும்.

ஈ. குளமேல் கால்வாயில் புறக்கால் வாய்க்கால் எடுக்கப்படும்.

உ. வாகைகுளமும் மற்ற குளங்களும் சீரமைக்கப்படும்.

இப்பணிகள் வடக்கு கோடை மேலழகியான் பாசனதாரர்களின் கனவுகளாகும். அவர்களின் கனவை நனவாக்க முடியும் என்ற நம்பிக்கை பொதுபணித்துறைக்கு வந்துள்ளது. கண்காணிப்புப் பொறியாளர் குறிப்பிட்ட பணிகள் முடிக்கப்பட்டால் தண்ணீர் வாய்க்காலுக்குக் கொண்டுவரும் இடையூறுகளில் பல அகன்று விடும். நீரைச் சீராகப் பங்கிட்டுக் கொள்வதில் சங்கம் தன் முழு கவனத்தையும் செலுத்த முடியும். கூட்டமைப்பு கால்வாய் மேலாண்மையை ஏற்கும்.

பல்வேறு சமய இனவேறுபாடுகளுக்கிடையே இணைந்து செயல்பட வேண்டும் என்ற உந்துதல், தொடர்ந்து கிடைத்துவரும் சீரிய தலைமை, கோட்பாடுகளை மதிக்க வேண்டும் என்று பாசனதாரர்களிடையே காணப்படும் மனப்பக்குவம், நிர்வாகிகளின் அயராத உழைப்பு, அரசு இயந்திரம் இச்சங்கத்திற்கு நல்கிவரும் ஒத்துழைப்பு அனைத்தும் மாதிரிச் சங்கமாக வாகைகுளம் வடக்குகோடை மேலழகியான் நில உடைமையாளர்கள் சங்கம் திகழ வழி கோலியுள்ளன.

## இணைப்பு

### அருஞ்சொல் ஆங்கிலப்பதம்

| | | |
|---|---|---|
| கலிங்கு | · | Surplus Weir |
| குளமேல் கால்வாய் | - | Tank on Channel |
| நீர்வள ஒருங்கிணைப்புத் திட்டம் | - | Water Resource Consolidation Project |
| பணி ஆய்வாளர் | - | Work Inspector |
| பட்டிவரி | - | Pound Tax |
| பதவு | - | Shutter |
| பாசன உதவியாளர் | - | Irrigation Assistant |
| புறக்கால் வாய்க்கால் | - | Pereferal Channel |
| மதகு | - | Sluice |
| மடை | - | Outlet |

*முகவரி*

*வடக்குகோடை மேலழகியான் கால்வாய்*
*நில உடைமையாளர் சங்கம்,*
*வாகை குளம், மன்னார் கோவில்* P.O.
*வழி அம்பாசமுத்திரம் - 627 413.*
*திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.*